## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1) 2018 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு வீரராக AHF (Asian Hockey Federation) ஆல் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர் யார்?**

A] ரூப்பேந்தர் பால் சிங்

B] பி ஆர் ஸ்ரீஜேஷ்

C] லால்ரெம்சியாமி

D] மன்பிரீத் சிங்

- ✓ இந்திய ஹாக்கி அணியின் கேப்டனான மன்பிரீத் சிங் அவர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்கான "ஆண்டின் சிறந்த வீரர்" என்னும் விருதை ஏசியன் ஹாக்கி கூட்டமைப்பு வழங்கியது.
- ✓ இந்திய பெண்கள் ஹாக்கி அணியில் உள்ள லால்ரெம்சியாமி அவர்களுக்கு ஆண்டிற்கான "வளரும் வீரர்" விருதை வழங்கியது.
- ✓ மன்பிரீத் சிங் இந்தியாவிற்காக பலமுறை கோப்பைகளை வென்றுள்ளார். மஸ்கட் எனும் இடத்தில் நடந்த ஏசியன் சாம்பியன்ஷிப் கோப்பையில் பாகிஸ்தானுடன் மோதிய விளையாட்டில் வெற்றி இரு அணிகளுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.
- ✓ பிரீடாவில் நடைபெற்ற **FIH** சாம்பியன்ஸ் கோப்பையில் இந்தியாவிற்கு வெள்ளிப் பதக்கம் பெற்றுத்தந்தார்.
- ✓ 18 வயதான லால்ரெம்சியாமி 2018 உலக கோப்பையில் **striker** ஆக பெரும் பங்காற்றினார்.
- ✓ உலகக் கோப்பை ஹாக்கி போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 அணிகளில் ஆசியாவில் இருந்து வெற்றி பெற்ற ஒரே நாடான இந்தியாவிற்கு **best performance of the year** என்ற விருது வழங்கப்பட்டது.

2) கீழ்க்காணும் எந்த மாநில அரசாங்கம் தொலைதூரப் பகுதிகளுக்கான படகு ஆம்புலன்ஸ் சேவையை தொடங்கியது?

A] ஒடிசா

B] ஜார்க்கண்ட்

C] மேற்கு வங்காளம்

D] ஆந்திரப் பிரதேஷ்

- ✓ ஒடிசா மாநில அரசாங்கம் சமீபத்தில் படகு ஆம்புலன்ஸ் சேவையை தொடங்கியது. இதன்மூலம் தொலைதூர பகுதியில் உள்ள நோயாளிகளை சுலபமாக மருத்துவமனையில் அனுமதிக்க இயலும்.
- ✓ இந்த சேவையின் கீழ் ஆறு படகு ஆம்புலன்ஸ்கள் மற்றும் நடைபாதை யுடன் கூடிய 60 படகுத்துறையை அமைத்துள்ளது. இந்த படகு சேவையின் செயல்பாட்டுத் தொகையாக ஆண்டுதோறும் ரூபாய் 90 லட்சம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.
- ✓ இந்த சேவையின் மூலம் தொலைதூரத்தில் வாழும் மக்களுக்கும் சாலை வழிப் பாதை அற்ற நீர்நிலைகளை அடுத்து இருக்கும் மக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாய் அமையும். 108 ஆம்புலன்ஸ் சேவையால் அடைய முடியாத இடங்களை இந்த நீர்வழி பயணத்தால் அடைய இயலும்.
- ✓ முதல் படகு ஆம்புலன்ஸ் சேவையானது கேந்திரபாரா மாவட்டத்தில் உள்ள பட்டிகார் என்ற இடத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மொத்த திட்ட செலவு ரூபாய் 5.40 கோடி ஆகும்.

**3) Wrestling Federation of India இந்தியாவின் மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

A] ஐடி நானாவதி

B] பிரிட்ஜ் பூஷன் சரண்சிங்

C] சத்தியபால் சிங்

D] தேஜ்பால் பைரேந்திர லக்ரா

- ✓ பிரிட்ஜ் பூஷன் சரண்சிங் அவர்கள் மூன்றாவது முறையாக எந்தவித எதிர்ப்பும் இன்றி ஒருமனதாக இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ✓ அடுத்த நான்கு ஆண்டு காலத்திற்கான அலுவலர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க constitution கிளப் ஆப் இந்தியாவில் தேர்தல் நடைபெற்றது.
- ✓ அவர்களுடன் ஐஜடி நானாவதி மூத்த துணை தலைவராகவும் வி என் பிரசாத் பொதுச்செயலாளராகவும் சத்தியபால் சிங் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- ✓ உத்தரப்பிரதேசம் மாநிலத்தின் கைசர்கஞ்ச் தொகுதியின் எம்பி ஆகவும் உள்ளார். ஜகர்தா மற்றும் பாலம்பாங்கில் நடைபெற்ற 2018 ஏசியன் விளையாட்டுப் போட்டியின் செஃப்-டி- மிஷனாகவும் பொறுப்பேற்றார்.

**4) கீழ்க்காணும் இந்திய ரயில்வே துறைக்கு உட்பட்ட, உலகின் உயர்ந்த ரயில்வே பாதை எது?**

A] சண்டிகர் - மணாலி - லே ரயில்வே பாதை

B] கான்பூர் - சிம்லா - லே ரயில்வே பாதை

C] டெல்லி - சிம்லா - லே ரயில்வே பாதை

D] புதிய பிலாஸ்பூர் - மணாலி - லே ரயில்வே பாதை

- ✓ புதிய பிலாஸ்பூர் - மணாலி - லே ரயில்வே பாதை உலகின் மிக உயர்ந்த ரயில் பாதையாகும். இதில் **30** ரயில்வே நிலையங்கள் உள்ளன.இது இந்தியா- சீனா எல்லையில் **2022** ஆம் ஆண்டிற்குள் அமையவிருக்கிறது.
- ✓ இந்தப் புதிய ரயில் பாதை திட்டம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் ராணுவ படைகளுக்கு பெரிதும் உதவுகிறது. மேலும் டெல்லியிலிருந்து லே அடைவதற்கு தற்போது பிடிக்கும் நேரத்தை விட பாதியாக குறையும். இதன் திட்ட செலவாக **83,360** கோடி ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.
- ✓ இது **465** கிலோ மீட்டர் தூரம் உள்ள ரயில்வே பாதையாகும். கடல் மட்டத்தில் இருந்து **5360** மீட்டர் உயரத்தில் இருக்கும். **465** கிலோமீட்டர் தூரத்தில் **52%** சுரங்கப்பாதையின் உள்ளே பயணம் அமையும். இதில் மிக நீளமான சுரங்கப்பாதை **27** கிலோ மீட்டர் தூரம் உடையதாகும். இந்த ரயில்வே பாதையில் அமையவிருக்கும் மொத்த சுரங்கப் பாதையின் தூரம் **244** கிலோ மீட்டர் ஆகும்.
- ✓ இந்தத் திட்டத்தில் **400** சிறிய பாலங்களும் **124** பெரிய பாலங்களும் **74** சுரங்கப் பாதைகளும் அமையவிருக்கிறது.
- ✓ இதில் மணிக்கு **75** கிலோ மீட்டர் வேகத்தில் ரயில் பயணிக்கும். இதனால் டெல்லியில் இருந்து லே அடைய **40** மணி நேரங்களாக இருந்த பயண நேரம் **20** மணி நேரமாக குறையும்.
- ✓ ஜம்மு காஷ்மீர் பகுதியில் இருக்கும் லே எனும் பகுதி சுற்றுலாத்துறையின் மையமாக கருதப்படுகிறது.
- ✓ இதில் **1.5** லட்சம் மக்கள் உள்ளனர். இந்தியா மற்றும் வெளி நாட்டைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் அதிகமாக இங்கே வருகை தருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**5) 4th Global Digital Health partnership summit** நான்காவது உலகளாவிய டிஜிட்டல் சுகாதார கூட்டு உச்சி மாநாட்டை நடத்திய சர்வதேச நிறுவனம் எது?

A] WHO

B] FAO

C] UNESCO

D] UNICEF

- ✓ மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜே பி நட்டா அவர்களால் கடந்த பிப்ரவரி மாதம் 25ஆம் தேதி நான்காவது உலகளாவிய டிஜிட்டல் சுகாதார உச்சி மாநாடு புதுடில்லியில் தொடங்கிவைக்கப்பட்டது.
- ✓ உலக சுகாதார நிறுவனம் மற்றும் உலக டிஜிட்டல் சுகாதார கூட்டு நிறுவனத்தால் **(Global Digital Health partnership)** மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் விழாவினை நடத்தியது.
- ✓ புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நாட்டு மக்களுக்கு உதவும் வகையில் **GDHP** நிறுவனம் அரசாங்கங்கள், அரசாங்க முகவர்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இதனை தொடர்ந்து நடத்தி வருகிறது இதுவே **GDHP**ன் நோக்கமாகும்.

**6)** செய்திகளில் காணப்பட்ட தேசிய போர் நினைவகம் கீழ்க்காணும் எந்த நகரத்தில் அமைந்துள்ளது?

A] அகமதாபாத்

B] புதுடில்லி

C] மும்பை

D] லக்னோ

- ✓ கடந்த பிப்ரவரி மாதம் 25ஆம் தேதி பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் புதுடெல்லியில், இந்திய கேட்டிற்கு அருகே உள்ள தேசிய போர் நினைவகத்தை இந்திய ராணுவத் துறையில் சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டிற்காக வீரமரணம் அடைந்த வீரர்களுக்காக அர்ப்பணித்தார்.
- ✓ நம் நாட்டின் அமைதிக்காகவும் எதிர் தாக்குதலின் போதும் தங்களின் உயிரை நீத்த வீரர்களை நினைவு கூறுவதாகவும் இந்த நினைவிடம் அமையும்.
- ✓ இதில் 4 தனி சக்கரங்கள் அமைக்கப்பட்டு இருக்கிறது. அவை அமர் சக்ரா, வீர் சக்ரா, தியாக சக்ரா, ரக்ஷ சக்ரா ஆகும்.
- ✓ இந்த வளாகத்தில் மைய சதுர தூபியும் அணையா ஜோதியும் ஆறு வெண்கல சுவரோவியங்களும் அமைந்துள்ளன. இந்த ஓவியங்கள் இந்திய ராணுவம், இந்திய விமானப்படை, இந்திய கப்பல் படையின் புகழ்பெற்ற போர்களை விவரிப்பதாய் அமைகிறது.

- ✓ இதன் தலைமை கட்டிடக் கலைஞர் சென்னையை தலைமையிடமாகக் கொண்ட விபி டிசைன் லேபை சேர்ந்த யோகேஷ் சந்திரஹாசன் ஆவார்.

**7) PM Kissan திட்டம் உத்திரப் பிரதேசத்தின் எந்த மாவட்டத்தில் அதிகாரப்பூர்வமாக தொடங்கிவைக்கப்பட்டது?**

**A]** பிராஹ்ராஜ்

**B]** பெரய்லி

**C]** கோரக்பூர்

**D]** ஜான்சி

- ✓ கடந்த பிப்ரவரி மாதம் **25**ஆம் தேதி பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் "பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி யோஜனா" என்ற திட்டம் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள கோரக்பூர் என்னும் மாவட்டத்தில் அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ கடந்த பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி அறிவிக்கப்பட்ட **2019-20** ஆம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டில் இந்த திட்டம் அறிவிக்கப்பட்டது. இதற்கான **100** சதவீத தொகையை மத்திய அரசே அளிக்கிறது.
- ✓ இத்திட்டத்தின் கீழ் **2** ஹெக்டேர் விவசாய நிலங்களை கொண்ட சிறு மற்றும் விளிம்புநிலை விவசாய குடும்பத்திற்கு ஆண்டுதோறும் ரூபாய் **6** ஆயிரம் மூன்று தவணைகளாக வழங்கப்படும்.
- ✓ இந்த தொகை பயனாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.
- ✓ விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தினால் **12** கோடிகளுக்கு மேல் உள்ள சிறு மற்றும் குறுநில விவசாயிகள் பயனடைவார்கள்.
- ✓ மேலும் விவசாயத்துக்கு தேவைப்படும் அனைத்து உபகரணங்களையும் பெறுவதற்கும் வசதி செய்து தரப்படும். இதனால் தனியார் தரகர்களிடம் பணத்தை கடனாகப் பெற்று விவசாயிகள் சிக்கிக்கொள்வது தவிர்க்கப்படுகிறது. மேலும் விவசாயத்தை தொடரவும் இத்திட்டம் ஊக்கமளிக்கிறது.

**8) "Period. End of sentence" என்ற குறும் படம் "ஆஸ்கர் 2019 விருதுகள்" விழாவில் சிறந்த ஆவணப்படத்திற்கான விருதை பெற்றது. இக்குறும்படத்தின் இணை- தயாரிப்பாளரான இந்தியர் யார்?**

winmeen.com

A] கிருஷ்ணன் குமார்

B] ஏ ஆர் முருகதாஸ்

C] கே பாலச்சந்தர்

D] குனித் மொங்கா

- "**Period.End of sentence**" என்ற குறும்படம் இந்தியாவின் கிராமப்புறங்களில் பரவி இருந்த மாதவிலக்கை பற்றிய தவறான எண்ணங்களை சுட்டிக்காட்டும் விதமாக இருந்ததால் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற **91**ஆவது அகாடமி அவார்ட்ஸ் விழாவில் சிறந்த குறும் ஆவணப்படமாக தேர்வு செய்து விருது வழங்கப்பட்டது.
- இப்படத்தின் இணை தயாரிப்பாளராக இந்தியாவைச் சேர்ந்த குனித் மொங்கா என்பவரும் இயக்குனராக ஈரானைச் சேர்ந்த ரய்க்கா செக்டாப்ஜீ என்பவரும் இருந்தனர்.
- இந்திய கிராமப்புற பெண்கள் மாதவிலக்கின்போது எதிர்கொள்ளும் சிக்கல்களையும் "பேட்மேன்"(**PAD MAN** ) என்று அனைவராலும் அழைக்கப் படுகின்ற அருணாச்சலம் முருகானந்தம் அவர்களின் கதையும் பின்னணியாகக் கொண்டு நகர்கிறது, படம்.
- டெல்லியின் புறநகர் பகுதியில் உள்ள ஹபூர் கிராமத்தை மையமாக கொண்டு இந்த படம் எடுக்கப்பட்டது.
- பல தலைமுறைகளாக இப்பெண்களால் சானிட்டரி நாப்கின்களை பயன்படுத்த இயலவில்லை. இதனால் பல சுகாதார, ஆரோக்கிய பிரச்சனைகளையும் பெண்கள் பள்ளியில் இருந்து இடை நிற்றலும் மலிவாக காணப்பட்டது.
- சானிட்டரி பேடுகளை தயாரிக்கும் கருவியை கிராமப்புறங்களில் நிறுவிய பின்னர் பெண்கள் தங்களுக்கான பேடுகளை தாங்களே உற்பத்தி செய்து அதை சந்தைப்படுத்தவும் கற்றுக்கொண்டு தங்களது சமூகத்தை உயரச் செய்தனர். **FLY** என்பது அவர்கள் தயாரிக்கும் பேடுகளின் பிராண்ட் ஆகும்.

**9) "91 ஆவது academy awards" விருதுகள் வழங்கும் விழாவில் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டது எது?**

**A] Bohemian rhapsody**

**B] The favourite**

C] Green book

D] Roma

- ✓ அமெரிக்க சுயசரிதை- நகைச்சுவை நாடகமான "கிரீன் புக்" என்ற படம் "**91**ஆவது **academy awards**" விருதுகள் வழங்கும் விழாவில் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டது. இந்த விழா கடந்த பிப்ரவரி மாதம் **25**ஆம் தேதி லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள டால்பி திரையரங்கில் நடத்தப்பட்டது.
- ✓ மேலும் இப்படத்திற்கு சிறந்த திரைக்கதைக்கான விருதும் இப்படத்தில் நடித்த மெகர்சலா அலி என்பவருக்கு சிறந்த துணை நடிகருக்கான விருதும் வழங்கப்பட்டது.
- ✓ **The favourite** என்ற படத்தில் சிறந்த நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியதால் பிரிட்டிஷ் நடிகை **Olivia Colman** அவர்களுக்கு சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்பட்டது.
- ✓ **bohemian rhapsody** என்ற சுயசரிதை படத்தில் நடித்த ரமி மாலிக் என்பவருக்கு சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டது.
- ✓ ரோமா படத்தின் இயக்குனர் அல்போன்சோ குரோம் அவர்களுக்கு சிறந்த இயக்குனருக்கான விருது வழங்கப்பட்டது. மேலும் ரோமா படம் சிறந்த வேற்று மொழி படத்திற்கான விருதையும் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதையும் பெற்றது.
- ✓ **Star is born** என்ற படத்தில் **Shallow** என்ற பாடலுக்காக பாப் திவா லேடி ககா**(Pop diva lady gagA]** அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.
- ✓ மார்வெல் இன் பிளாக் பாந்தர் என்ற படமும் **3** விருதுகளை பெற்றது. அவை சிறந்த இசை, சிறந்த ஆடை வடிவமைப்பு மற்றும் சிறந்த தயாரிப்பு வடிவமைப்புக்கும் ஆகும்.

**10)** தென்கிழக்கு ஆசிய பகுதியின் **hepatitis** க்கு எதிரான **WHO** வின் நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்ட இந்திய பிரபலம் யார்?

A] அமிதாப் பச்சன்

B] சச்சின் டெண்டுல்கர்

C] விராத் கோலி

D] கபில்தேவ்

- ✓ கடந்த பிப்ரவரி மாதம் **24**ஆம் தேதி மத்திய அமைச்சர் அஸ்வினி குமார் அவர்கள் ஹெப்பாடிட்டீஸ் வைரஸ்க்கு எதிரான தேசிய நடவடிக்கை திட்டத்தை **(National action plan)** அமிதாப் பச்சன்

முன்னிலையில் மும்பையில் அறிமுகப்படுத்தினார். இவர் **WHO**வால் நியமிக்கப்பட்ட நல்லெண்ண தூதராவார். இத்திட்டத்தின் நோக்கம் தென்கிழக்கு ஆசியப்பகுதிகளில் ஹெப்பாடிட்டீஸ் வைரஸின் தாக்கத்தை **2030**க்குள் குறைப்பதாகும்.

- ✓ மேலும் இத்திட்டம் இந்தியாவின் **sustainable development 3.3** எனப்படும் குறிக்கோளின் கீழ் அடங்கும். இந்த வைரஸின் தாக்கத்தை குறைக்க **69** ஆவது உலக சுகாதார மன்றத்தில் இந்தியா சபதம் எடுத்துக் கொண்டது.
- ✓ இந்த வைரஸ் தாக்கத்தினால் ஆண்டுதோறும் உலக அளவில் **2.72** இலட்சம் மக்கள் இறக்க நேரிடுகின்றது.
- ✓ இது கல்லீரலின் அழற்சி நோயாகும். இதற்கு காரணமாக வைரஸ்கள் **A,B,C,D** மற்றும் **E** உள்ளது.
- ✓ இவற்றுள் வைரஸ் **B** மற்றும் **C** பிரிவு **96** சதவீத இறப்பிற்கு காரணமாய் அமைகிறது. குறிப்பிட்ட சில நாடுகளுள் இந்தியா, ஹெபடைடிஸ் **B** மற்றும் ஹெபடைடிஸ் **C** வைரஸ்களை ஆராய்ந்து அதற்கான மருந்துகளை நோயாளிகளுக்கு இலவசமாக பொதுசுகாதார மருத்துவமனைகளில் வழங்கி குணப்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

winmeen.com